# மாவத்தகம பிரதேச சபை

# குருணாகல் மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 29 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 15 ஆம் திகதியும் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளின் மூலம் தெரிய வந்தவை மற்றும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, மாவத்தகம பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கேடுகளை பேணியிருந்தததுடன், இவ்வறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவத்தகம பிரதேச சபையின் செயலாற்றுகை தொடர்பான நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகளை உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் சபையின் 2010 ஆம் ஆண்டில் சுவீகரிக்கப்பட்ட காணி கட்டிடங்களின் பெறுமதி ரூபா 6,999,200 (காணி - 2,279,200, கட்டிடம் - 4,720,000) தொகையாக இருந்த போதிலும் நாட்குறிப்பு 57 இன் பிரகாரம் அது ரூபா 7,099,200 தொகை என ரூபா 100,000 இனால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலையான சொத்துக்களின் கீழான மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் நூலகப் புத்தகங்கள் தவிர ஏனைய நிலையான சொத்துக்களின் பெறுமதி கணிப்பீடு செய்யப்படாமல் அவற்றின் புத்தகப்பெறுமதியான ரூபா 52,891,735 தொகை கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரிய ஆதனவரியின் கீழ் வழங்கப்பட்டிருந்த ரூபா 33,130 தொகையான கொடுத்த கழிவானது செலவினங்களின் கீழ் கணக்கு வைக்கப்படாமல் மீளாய்வாண்டிற்குரிய வருமானங்களிலிருந்து கழித்து காணப்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் ஆதனவரி முற்பணமாகப் பெறப்பட்டவை ரூபா 936,307 ஆக இருந்த போதிலும் அது நடைமுறைப் பொறுப்பின் கீழ் கணக்கு வைக்கப்படாமல் வருமானக் கடன்பட்டோரிலிருந்து கழித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

18 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 44,322,725 ஆக இருந்ததுடன், பட்டோலைகள் / அறிக்கைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 25,172,807 ஆக இருந்தது.

### 1.3.3 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 13,494,925 ஆக இருந்தது.

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 621,830 ஆக இருந்ததுடன், அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,759,276 ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடுகள்

(அ) நீண்ட காலமாக வைப்புக்களின் கீழ் கொண்டுவரப்படுகின்ற 06 நீர் வைப்பு வகைகளின் கீழ் காணப்பட்ட ரூபா 5,590,367 தொகை மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 650,000 தொகைகளையும் இனங்கண்டு மீளாய்வாண்டு இறுதிவரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 03 வங்கிக் கணக்குகளுக்குரிய வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 181,647 பெறுமதியான 18 காசோலைகள் காணப்பட்டன.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்டது | உள்ள வாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்டது | உள்ள வாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா ('000) | ரூபா ('000) | ரூபா ('000) | ரூபா ('000) | ரூபா ('000) | ரூபா ('000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,688 | 1,700 | 3,920 | 1,545 | 1,357 | 3,930 |
| (ii) | வாடகை | 4,799 | 4,632 | 2,272 | 6,389 | 6,281 | 2,233 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 890 | 891 | 98 | 930 | 968 | 98 |
| (iv) | ஏனைய வருமானம் | 36,220 | 3,298 | 23,971 | 33,814 | 33,031 | 26,171 |
| | மொத்தம் | 43,597 | 10,521 | 30,261 | 42,678 | 41,637 | 32,432 |

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றத்தினால் 2010 திசம்பர் 31 வரை அறவிடப்பட்டுள்ள ரூபா 1,877,367 ஆன தண்டப்பணத் தொகை சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.3.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 16,185,662 தொகை முத்திரைக் கட்டணங்களாக கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.3.4 பொதுச் சந்தை கடை வாடகை

மாவத்தகம பொதுச் சந்தையில் 42 கடைகளுக்குரியதாக மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் ரூபா 516,092 நிலுவை மீதியொன்று காணப்படுவதுடன் அந்நிலுவைகள் 1 தொடக்கம் 10 வருடம் வரையான கால வீச்சிக்கிடையே காணப்பட்டது. இந்நிலுவை சம்பந்தமாக ஒப்பந்தத்தின் பிரகாரம் வழக்கு தொடரப்பட்டு நிலுவை வாடகையினை அறவீடு செய்து கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதியில் 04 இறைச்சி மீன் கடைகளுக்குரியதாக ரூபா 89,703 நிலுவையாகக் காணப்பட்டதுடன் ஏடுகளின் பிரகாரம் முன்னைய வருடங்களிலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 442,202 நிலுவையொன்று காணப்பட்டபோதும் அதற்குரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 நடமாடும் வியாபாரக் கொட்டில்களுக்கான வாடகை

உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 700,000 கடன் பணத்திலிருந்து தயாரிக்கப்பட்டிருந்த 20 நடமாடும் வியாபாரக் கொட்டில்கள் மாதாந்தம் ரூபா 1,104 தொகைப்படி 36 தவணைகளிலும் மாதாந்தம் ரூபா 200 வாடகைப் பணம் செலுத்தும் அடிப்படையில் வாடகையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதில் 17 வியாபாரக் கொட்டில்களில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 240,120 வாடகைப் பணம் நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.3.6 ஆதன வரி

மீளாய்வாண்டிற்குரிய சபையின் வருடாந்த ஆதன வரி பற்றுச்சீட்டிடல் ரூபா 1,604,241 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ரூபா 3,541,800 என 2 வருட வருடாந்த பற்றுசீசீட்டிடல்களுக்குரிய அண்ணளவான பெறுமதியைக் கொண்டிருந்தது. இம் மீதியானது 2009 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து நீண்டகாலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற நிலுவையாக இருந்ததுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகள் மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 33 - 41 வரையான விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு நிலுவைப் பணத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.7 ஏக்கர் வரி

மீளாய்வாண்டிற்குரிய சபையின் வருடாந்த ஏக்கர்வரி பற்றுச்சீட்டிடல் ரூபா 33,318 ஆக இருந்ததுடன் வருடாந்த பற்றுச்சீட்டு அறவீட்டின் அடிப்படையில் 16% மாத்திரமாக ரூபா 5,553 தொகையான மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியில் ஏக்கர் வரி நிலுவை ரூபா 378,529 ஆக இருந்ததுடன் அதனை வருடாந்த பற்றுச்சீட்டிடலுடன் இணக்கம் செய்த போது 11 வருட கால பற்றுச்சீட்டிடல்களின் அண்ணளவான பெறுமதியைக் கொண்டிருந்தது. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 ஆம் பிரிவு மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 44 ஆம் விதியில் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் விதிக்கோவையின் 33 இலிருந்து 41 வரையிலுள்ளதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு நிலுவையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 பாதீடு செய்யப் பட்டது | 2010 உள்ள வாறானது | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப் பட்டது | 2009 உள்ள வாறானது | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனம் | 34,741 | 29,486 | 5,255 | 35,951 | 27,896 | 8,055 |
| ஏனையவை | 17,334 | 13,495 | 3,839 | 15,195 | 12,072 | 3,123 |
| உப மொத்தம் | 52,075 | 42,981 | 9,094 | 51,146 | 39,968 | 11,178 |
| மூலதனச் செலவினம் | 38,200 | 21,941 | 16,259 | 37,325 | 24,435 | 12,890 |
| மொத்தம் | 90,275 | 64,922 | 25,353 | 88,471 | 64,403 | 24,068 |

## 2.5 மிகைக்கட்டண அறவீடு

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172(3) ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களின் கீழ் உரிய பொறுப்பான அலுவலர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகைக்கட்டணங்களுக்கு அமைய 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவிடவேண்டியிருந்த மிகைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 20,152 ஆகும்.

## 2.6 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணிகள் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| ஊழியர் தரம் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 02 | 02 |
| இரண்டாம் தரங்கள் | 10 | 09 |
| ஆரம்ப தரங்கள் | 64 | 63 |
| ஏனைய (நாளாந்த,தற்காலிக) | - | 56 |

## 2.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.7.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்படவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 30,953,971 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 30,919,966 ஆக இருந்தது.

### 2.7.2 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 33,167 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 22,567 ஆக இருந்தது.

### 2.7.3 அசைவுறாத நடைமுறைச் சொத்துக்கள்

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் பல வருடகாலத்திலிருந்து முன்கொண்டு வரப்படுகின்ற கொங்ரீட் செயற்திட்டத்திற்குரிய ரூபா 1,719,098 ஆன கடன்பட்டோர் மீதியொன்று காணப்படுவதுடன் அம் மீதிகளுக்குரிய தகவல் பட்டோலைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் கொங்ரீட் செயற்திட்டத்திற்குரியதாக பல வருட காலமாக முன் கொண்டுவரப்படுகின்ற ரூபா 28,040 ஆன மூலப்பொருள் இருப்பு மீதியும் ரூபா 31,428 ஆன முடிவடைந்த பொருள் இருப்பு மீதியொன்றும் காணப்பட்டன.

(இ) சபையின் 5 நூலகங்களிலிருந்தும் விநியோகிக்கப்பட்டு பல வருடகாலம் கடந்திருந்தும் மீளப்பெறப்பட்டிருக்காத ரூபா 40,293 பெறுமதியான 467 புத்தகங்கள் காணப்பட்டன.

## 2.8 இனங்காணப்பட்ட நட்டம்

சபைக்குச் சொந்தமான நீர்த்தாங்கிகளுக்கு நீர்பாய்ச்சும் 04 பம்பிகளுக்குரிய மின்சார கட்டணப்பட்டியல்கள் உரிய காலப்பகுதியின் போது செலுத்தாததன் அடிப்படையில்

துண்டிக்கப்பட்டிருந்த மின்சாரத்தை மீளப் பெறுவதற்காக ரூபா 2,107 தொகைப் பணமானது சபை நிதியத்திலிருந்து மீளாய்வாண்டில் செய்யப்பட்டிருந்தது.

## 2.9 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்த முடியாத கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2010 யூன் 07 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் GGRC/21/05 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அரசாங்க மற்றும் தனியார் பிரிவுச் செயற்குழுவொன்றைத் தாபிப்பதற்காக ஆசிய மன்றத்தினால் ரூபா 10,000 நிதி பெறப்பட்டிருந்த போதிலும் உரிய செயற்பாட்டிற்காக அவ் எல்லையினை மீறி ரூபா 37,740 தொகையொன்று அங்கீகாரமின்றி செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மாவத்தகம பொதுச் சந்தையின் பின்புறத்திலுள்ள வெற்றுக்காணியில் கடையொன்று நிர்மாணிப்பதற்காக விண்ணப்பதாரர் ஒருவருக்கு 2010 யூன் 29 ஆந் திகதிய 4.27 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தினால் அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 80/46 ஆம் இலக்க சுற்றுநிருப அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

## 2.10 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையில் சேவையாற்றி ஓய்வூதியம் பெற்ற உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்த வேண்டிய உத்தியோகத்தர்களுக்குரியதும் சபையினால் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டியதுமான பங்களிப்புப் பணம் உரிய முறையில் செலுத்தப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 3,017,544 ஆக இருந்தது. அவ்வாறே சபையினால் மாதாந்த தவணையாக ரூபா 9,710 படி அந் நிதியத்திற்காக அறவிடப்பட்டிருந்தும், அவ்வாறு அறவிடப்பட்டவை சபையின் எவ்வெவ் உத்தியோகத்தர்களுக்குரியது என்பது பற்றி சபை அறிவித்திருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமாக 08 வாகனங்கள் காணப்பட்டதுடன் அவ்வாகனங்களை சபைத் தேவைகளுக்காக ஒதுக்குகின்றபோது மாதிரிப் படிவங்கள்

பயன்படுத்தப்பட்டிருக்காமை, பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெறப்படாமை, வெளிச்செல்லும் போதும், திரும்ப உள்வரும் போதும் வாயிற் கதவில் பிரிசோதனைக்கு உட்படுத்தாமை, எரிபொருளுக்காக அங்கீகரிக்கப்பட்ட கட்டளை பாவிக்கப்படாமை, அன்றன்று காசு அடிப்படையில் எரிபொருள் பெறப்பட்டமை, 06 மாத்திற்கு ஒருதடவை எரிபொருள் பாவிப்பு பரிசோதனை செய்யப்படாமை மற்றும் சபைக்கு மானியமாகக் கிடைத்திருந்த 53-6115 ஆம் இலக்க நோயாளர் காவும் வாகனம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாமல் கராஜில் வைக்கப்பட்டிருந்தமை போன்ற குறைபாடுகள் காணப்பட்டன.

(இ) மீளாய்வாண்டில் புத்தகப் பெறுமதி ரூபா 52,891,735 ஆன சொத்துக்களுக்கு பொருள் மெய்மையாய்வொன்று நடைபெற்றிருந்த போதும் உரிய மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் அதன் பெறுமதிகள் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 42,600 பெறுமதியான 500 புத்தகங்கள் மட்டில் தொலைந்து போயிருந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் ஆகஸ்ட் 18 ஆந் திகதி சபையின் களஞ்சியத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது 21 விடயங்களுக்குரிய இருப்புப் புத்தகங்களின் பிரகாரமும் அத்திகதியில் உள்ளவாறான பௌதீக மீதியின் பிரகாரமும் 365 பிரிவுகள் இணங்காதிருந்ததுடன் 881 களஞ்சிய பெறுவனவுக் குறிப்புக்களின் கீழ் 11 விடயங்கள் முறையாகக் கொள்வனவு செய்யும் செயற்பாடுகளின்றிய கொள்வனவுகளும் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 2.11 செயலாற்றல்

----------------------

ஜாதிக சவிய கமநெகும - இன் இரண்டாவது கட்டத்தின் கீழ் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி பூர்த்தி செய்து கையளிக்கவேண்டிய 56 செயற்திட்டங்களுக்காக ரூபா 37,800,000 நிதிஏற்பாடுகள் கிடைத்திருந்த போதிலும் இதில் 08 செயற்திட்டங்களுக்கு மாத்திரம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், அதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 04 செயற்திட்டங்களில் மாத்திரமே வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

## 2.12 உள்ளகக் கணக்காய்வு

---------------------------------------

நிறுவனத்தில் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமானக் கட்டுப்பாடு

(ஈ) சொத்து முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிருவாகம்